**பானதுற நகர சபை**

**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 14 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2017 செப்டம்பர் 29 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினக் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 13,263,170 ஆகும். எவ்வாறாயினும், அதனை ரூபா 16,163,055 ஆகக் காட்டியமையால் நிதிக்கூற்றுக்களில் செலவினக் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 2,899,885 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி நிறுவனங்களது கணக்கீட்டு நடைமுறைகளுக்கமைய நிலையான சொத்துக் கணக்கினது மீதி மற்றும் மூலதனப் பயன்பாட்டிற்கு வருவாயின் பங்களிப்புக் கணக்கு மீதி இரண்டும் ஒன்றுக்கொன்று சமமாக

இருத்தல் வேண்டுமாயினும், மீளாய்வாண்டில் அவ்விரு கணக்குகளுக்குமிடையே ரூபா 932,764 வித்தியாசமிருந்தது.

(இ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 1,780,482 க்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின்போது இயந்திரங்கள் மற்றும் இயந்திர சாதனங்கள் மற்றும் வீதி நிர்மாண வேலைகள் என்பவற்றிற்கு ஏற்பட்ட செலவினம் ரூபா 282,371 ஆகும். இது நிதிக் கூற்றுக்களில் செலவினமாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) உள்ளூர்க் கடன் அபிவிருத்தி நிதியக் கடன் மூலம் பெறப்பட்ட பெக்கோ லோடரைக் கணக்கிலிடும்போது அக்கடனுக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 2,140,772 வட்டியையும் உள்ளடக்கி மூலதனமாக்கப்பட்டதால் நிலையான சொத்துக்களும் மூலதனத்திற்கு வருவாயின் பங்களிப்புக் கணக்கு மீதியும் ரூபா 2,140,772 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) 2013, 2014 ஆம் ஆண்டுகளுக்கெனப் பெறப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூபா 47,025,421 ஆகும். இது மீளாய்வாண்டின் வருவாயாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 60,395,961 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டினது மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 31,428,682 ஆகும். இதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் ரூபா 28,967,279 அதிகரிப்பு தென்பட்டது.

வருவாயில் ரூபா 53,590,950 அதிகரிப்பும் செலவினத்தில் ரூபா 24,623,671 அதிகரிப்பும் நிதிப்பெறுபேற்றில் ஏற்பட்ட ரூபா 28,967,279 அதிகரிப்புக்கான பிரதான காரணிகளாகும்.

## 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை

மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளவாறானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | தீர்வையும் வரியும் | 43,994 | 29,156 | 23,564 |
| (ii) | குத்தகை வாடகை | 3,528 | 3,404 | 593 |
| (iii) | அனுமதிப் பத்திரக்கட்டணம் | 364 | 356 | 08 |
| (iv) | ஏனைய வருவாய் | 36 | 36 | - |

### 2.2.2 தீர்வை வரி

(அ) ஆண்டின் ஆரம்பத்திலிருந்த ரூபா 25,196,795 தீர்வை வரி மீதியில் ஆண்டின்போது 59 சதவீதமான ரூபா 14,764,572 அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) ஆண்டின்போது தீர்வை வரிக்கென ரூபா 40,888,525 பட்டியலிடப்பட்டிருந்ததுடன், அதன் 64 சதவீதமான ரூபா 26,182,574 ஆண்டின்போது அறவிடப்பட்டிருந்தது.

(இ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த தீர்வை வரி மீதி ரூபா 23,350,372 ஆகும். அதில் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவையான ரூபா 1,975,529 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவையான ரூபா 4,449,561 என்பன இருந்தமையால் தீர்வை வரி நிலுவை மீதி அறவிடப்படுவதில் நலிவு இருப்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிலுவையாகவிருந்த மேற்படி தீர்வை வரி மீதியில் ரூபா 50,000 க்கு மேற்பட்ட 52 கூறுகள் இருந்தன.

### 2.2.3 வர்த்தக நிலைய வாடகை

ஆண்டின் ஆரம்பத்திலான ரூபா 708,687 மீதியில் ஆண்டின்போது அறவிடப்பட்ட தொகை 34 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 238,877 ஆகும். மீளாய்வாண்டிற்கெனப் பட்டியலிடப்பட்ட ரூபா 3,261,124 தொகையில் 96 சதவீதமான ரூபா 3,137,647 அறவிடப்பட்டிருந்தது.

### 2.2.4 முச்சக்கர வண்டித் தரிப்பிடக் கட்டணம்

2015 சனவரி 29 ஆந் திகதிய 6:1:14 ஆம் இலக்கப் பொதுச் சபைக் கூட்டத் தீர்மானத்தின் மூலம் ஒரு முச்சக்கர வண்டிக்கான தரிப்பிடக் கட்டணம் ரூபா 1,000 ஆக வேண்டுமெனத் தீர்மானித்து உப விதிகள் தயாரிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள 67 தரிப்பிடங்களில் 42 தரிப்பிடங்களிலிருந்து 2016 ஆம் ஆண்டின்போது கட்டணம் எதுவும் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், இத்தரிப்பிடங்களில் நிறுத்தி வைக்கப்படும் முச்சக்கர வண்டிகள் தொடர்பான கணிப்பை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை சபை மேற்கொள்ளவில்லை.

### 2.2.5 விளம்பரப் பலகைக் கட்டணம்

(அ) 2016 ஆம் ஆண்டிற்கான விளம்பரப் பலகைக் கணிப்பு மேற்கொள்ளப்படாமையால் சபை பெற வேண்டிய அறிவித்தல் பலகை வருவாயை மதிப்பிட முடியவில்லை.

(ஆ) கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட 11 அறிவித்தல் பலகைகள் மூலம் ரூபா 368,875 அறவிடப்பட வேண்டியிருந்தது. இவ்வருவாயை அறவிடாது அந்த அறிவித்தல் பலகைகள் அகற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

### 2.2.6 முத்திரைக் கட்டணம்

மாகாண சபைத் தலைமைச் செயலாளரிடமிருந்து 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 78,189,060 முத்திரைக் கட்டணம் பெறப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயற்பாட்டு / முகாமைத்துவ வினைத்திறமையின்மை

(அ) வாகனக் கட்டுப்பாடு

பயன்படுத்தப்படாதிருக்கும் வாகனங்கள்

பழுதுபார்ப்பதால் பயன் விளையாது எனக் குறிப்பிட்ட முகவர் நிறுவனம் அறிவித்திருந்த வாகனமொன்று பழுதுபார்க்கப்பட்டு 5 மாதங்களின் பின்னர் செயலற்றுப் போனது. அதனைப் பழுதுபார்ப்பதற்கு வெளி நபர்களுக்கு ரூபா 76,070 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், பழுதுபார்த்ததன் பின்னர் அது பயன்படுத்தப்படாது வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) கழிவுப் பொருட்களை அகற்றுவதற்குத் தனியார் நிறுவகம் ஒன்றிற்குப் பணம் கொடுப்பனவு செய்தமை

நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்குக் கூறு விலை கோரப்பட்டு தனியார் நிறுவனம் ஒன்றிடம் அவ்வேலை ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் 1479 லோட் கழிவுப் பொருட்களுக்கு சபை 31,059,000 கொடுப்பனவு செய்திருந்தது. இது தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. ஒரு லோட்டுக்கு (3கியூப்) ரூபா 17,570 எனும் குறைந்த கூறு விலையைச் சமர்ப்பித்த சுபர் கொம்போஸ்ட் நிறுவனத்தைப் புறக்கணித்து அதிக விலையான ரூபா 21,000 ஐச் சமர்ப்பித்திருந்த G.F.C மெஷினரி (பிரத்தியேக) கம்பனியை பொருட் கொள்வனவுக் குழு தெரிவு செய்தமையால் சபையின் நிதியத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 5,072,970 ஆகும். மேலும், கழிவுப் பொருட்களை அகற்றும்போது முறையான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டிராமை, மாதாந்தம் அகற்றப்படும் கழிவுப் பொருட்களது லோட்களின் அளவு 88 முதல் 156 வரை ஒன்றுக்கொன்று வேறுபாடான நிலைமையைக் காட்டியமை, கழிவுப் பொருட்கள் அகற்றப்படுமிடத்துக்கு அனுமதிப்பத்திரம் இல்லாதிருந்தமை, 2010 ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட ஜீவ வாயுக் கூறை செயற்படுத்தாமை என்பவற்றுடன் சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்களின் மூலம் உரத்தை உற்பத்தி செய்வது போன்ற கிரமமான நடவடிக்கைகளை அறிமுகஞ் செய்வதைக் கருத்திற் கொள்ளாது சபை

தொலைவில் உள்ள வேயங்கொடை போன்ற இடத்தில் கழிவுப் பொருட்களை அகற்றியிருந்தது.

(இ) பொதுச் சந்தைக் கூட்டுத் தொகுதிக் கட்டிடம் ஆபத்தான நிலையில் உள்ளமை

---

1993, 1994 ஆம் ஆண்டுகளில் 25830 சதுர அடி விசாலமான இரு மாடிகளுக்குத் திட்டமிடப்பட்டு ஒரு மாடி மாத்திரம் அமைக்கப்பட்டு உள்ளே 250 கடைகளையும் வெளியே 70 கடைகளையும் இவ் வர்த்தகக் கூட்டுத்தொகுதி கொண்டிருந்தது. தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தால் 2016 ஆகஸ்ட் 24 ஆந் திகதியன்று வழங்கப்பட்ட அறிக்கையின்படி இக்கட்டிடத்தின் கொங்கிரீட் அமைப்பு அழிவுற்ற நிலையில் இருப்பதால் பாவனைக்கு ஆபத்தாக அமையலாம் என்பதால் அதனைத் தகர்த்து அப்புறப்படுத்துமாறு தெரிவித்திருந்தது. இதனைக் கடை உரிமையாளர்களுக்குச் சபை அறிவித்திருந்தது. 2016 டிசெம்பர் மாதமளவில் அவ்விடத்தை விட்டு நீங்குவதாக அறிவித்திருந்தபோதும், கடை உரிமையாளர்கள் தொடர்ந்தும் கடைகளை நடாத்தியவாறிருந்தனர். ஆபத்தான இக்கட்டிடத்தில் விற்பனை நிலையங்களை நடாத்துவதால் வர்த்தகர்களுக்கும் அங்கு வரும் பொதுமக்களுக்கும் எச்சந்தர்ப்பத்திலும் பெறும் அழிவு ஏற்படலாம் என அவதானிக்கப்படுகின்றது. மேலும், இக்கட்டிடத்தின் பொருட்டு 2016 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களுக்கான மின்சாரக் கட்டணமாக ரூபா 79,485 செலுத்தப்பட்டிருந்ததுடன், நீர் மற்றும் மின்சாரக் கட்டணமாக மேலும் ரூபா 114,440 க்கான பட்டியல் பெறப்பட்டுமிருந்தது.

(ஈ) காணி, கட்டிடங்களைப் பரிசீலித்தல்

---

நாளது வரையாக்கப்படாத நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடங்கிய மற்றும் உள்ளடங்காத 45 காணிகளுக்கான 2 உரித்துறுதிகள் மாத்திரமே சபையிடமிருந்தன. சபைக்குச் சொந்தமான காணிகளைத் தெரிவுச் செவ்வை செய்தபோது சபைக்குரிய சில காணிகள் வெவ்வேறாக்கப்பட்டு இனங்காணப்படக்கூடியதாக இருக்கவில்லை. மேலும், அத்துமீறிய குடியேற்றங்களும் அவதானிக்கப்பட்டதுடன், உறுதிகளின் வாயிலாக நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த காணிகளும் சபையின் சொத்தாக நிலையான சொத்துப் பதிவேட்டில் காட்டப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

**4.** **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

(இ) வருவாய் நிர்வாகம்

(ஈ) பாதீடு